# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 13768/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**<u>முன்னிலை : ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்</u>**

**<u>மேல் முறையீட்டு மனு எண். 105 / 2015</u>**

திரு. மா. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
வழக்கறிஞர்,
ஜெயங்கொண்டம்,
உடையார்பாளையம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம். . . . . .மேல்முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நான்கு சாலை,
துரைமங்கலம், பெரம்பலூர் மாவட்டம். . . . . . . எதிர்மனுதாரர்

**<u>ஆணை நாள் : 3–3–2016</u>**

1. திரு. மா. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L., வழக்கறிஞர், ஜெயங்கொண்டம் அவர்களின் 30.12.2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.105 /2015 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேற்கண்ட மனுவில், மேல்முறையீட்டாளர் அவருடைய கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு வழங்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

3. மேற்கண்ட மனுவின் நகல், மேற்பார்வை பொறியாளர், பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம் அவர்களுக்கு மேல்முறையீட்டாளருடன் இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்கும்படி மின்குறைதீர்ப்பாளரின் 5.1.2016 நாளிட்ட அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. மேற்பார்வை பொறியாளர், பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய 21.1.2016 நாளிட்ட பதிலுரையை சமர்ப்பித்துள்ளார்.

5. மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின்குறைதீர்ப்பாளரின் முன்பாக கேட்புரை 18.3.2016 அன்று நடைபெறும் என்று இருதரப்பினருக்கும் மின்குறைதீர்ப்பாளரின் 24.2.2016 நாளிட்ட அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. மேல்முறையீட்டாளர் திரு. மா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மேற்கண்ட மேல்முறையீடு மனு சம்பந்தப்பட்ட சர்வே எண்.120/2A கிணற்றிற்கு 5.2.2016 அன்று மின்சாரம் வழங்கப்பட்டு விட்டது என்றும் அந்த மின்சார இணைப்பின் எண்.458 என்றும் தெரிவித்து, தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை மேற்கொண்டு விசாரிக்காமல் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று 29.2.2016 நாளிட்ட மெமோ–வில் கோரியுள்ளார். மேற்கண்ட 29.2.2016 நாளிட்ட மேல்முறையீட்டாளரின் மெமோ–வின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“தங்களின் 24.2.2016 தேதியிட்ட நோட்டீஸ் எனக்கு கிடைக்கப்பெற்றது. மேற்படி மேல்முறையீட்டு மனு சம்பந்தப்பட்ட சர்வே எண்.120/2*A *கிணற்றிற்கு 5.2.2016ந் தேதியன்று மின்சாரம் வழங்கப்பட்டுவிட்டது. அந்த மின்சார இணைப்பு எண்.*SC No.*458 ஆகும்.*

*ஆகவே, பெருமதிப்பிற்குரிய மின்குறைதீர்ப்பாளர் அவர்கள் தயவு செய்து இந்த மேல்முறையீட்டு மனுவை மேற்கொண்டு விசாரிக்காமல் தள்ளுபடி செய்து உத்திரவு பிறப்பிக்க மிகவும் பணிவுடன் பிரார்த்தித்து கொள்கிறேன்.”*

7. மேல்முறையீட்டாளர், தன்னுடைய கோரிக்கையான சர்வே எண்.120/2A–யில் அமைந்துள்ள கிணற்றிற்கு மின்இணைப்பு வழங்கப்பட்டது என்று தெரிவித்து தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கோரியுள்ளதால் மேல்முறையீட்டு மனு எண்.105/2015 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர் :

1) திரு. மா. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
வழக்கறிஞர்,
ஜெயங்கொண்டம்,
உடையார்பாளையம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம்.

2) மேற்பார்வை பொறியாளர்,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நான்கு சாலை,
துரைமங்கலம், பெரம்பலூர் மாவட்டம்.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நான்கு சாலை,
துரைமங்கலம், பெரம்பலூர் மாவட்டம்.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணிணி) – **இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.